# அறிவிப்பு - Notification
## மாவட்ட நலச்சங்கம், சிவகங்கை மாவட்டம்
## மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை

சிவகங்கை மாவட்டத்தில் தேசிய நலவாழ்வு குழுமத்தின் (NHM) கீழ் தேவகோட்டை நகர்புற ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் துணை இயக்குநர் குடும்ப நலப்பணிகள் அலுவலகத்தில் உள்ள கீழ்கண்ட காலிப்பணியிடத்தில் **ஒப்பந்த அடிப்படையில்** பணிபுரிவதற்கு பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 11.12.2024 **முதல்** 26.12.2024 அன்று மாலை 5.00 மணிக்குள் வரவேற்கப்படுகின்றன.

| வ.எண் | பதவியின் பெயர் | காலிப் பணியிடங்களின் எண்ணிக்கை | கல்வித் தகுதி | மாத ஊதியம் |
|---|---|---|---|---|
| 1. | ஆய்வக நுட்புநர் நிலை-3 (Lab Technician Gr- III) | 1 | 12 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மருத்துவக் கல்வி இயக்குநரால் அங்கீகரிக்கப்பட்ட ஏதேனும் ஒரு கல்வி நிறுவனத்தில் மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப படிப்பில் (ஒரு வருட காலம்) தேர்ச்சி பெற்றிருக்கவேண்டும். நல்ல உடல் திறன், நல்ல கண் பார்வை மற்றும் வெளிப்புற வேலை செய்யும் திறன் ஆகியவற்றை கொண்டிருக்கவேண்டும். | ரூ.13000/- |
| 2. | திட்டம் மற்றும் நிர்வாக உதவியாளர் (Programme cum Administrative Assistant) | 1 | அங்கீகரிக்கப்பட்ட பட்டதாரி, சரளமாக எம்எஸ் ஆபிஸில் பணிபுரிதல், சுகாதார திட்டம்/தேசிய ஊரக நலக்குழுமம் (NRHM) தொடர்பான அலுவலக நிர்வாகத்தில் பணிபுரிந்த ஒரு வருட அனுபவம், கணக்கியல் அறிவு (Accountancy) மற்றும் வரைவு எழுதும் திறன் (drafting skills) ஆகியவற்றை பெற்றிருக்கவேண்டும். | ரூ.12000/- |

**விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:**

செயலாளர், மாவட்ட நலவாழ்வுச் சங்கம் / மாவட்ட சுகாதார அலுவலர்,
மாவட்ட சுகாதார அலுவலகம்,
முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலக மேல்தளம்,
சிவகங்கை மாவட்ட ஆட்சியர் பெருந்திட்ட வளாகம்,
சிவகங்கை.
தொலைபேசி எண் 04575-240524.

**குறிப்பு:**

1. விண்ணப்பப் படிவம் சிவகங்கை மாவட்ட வலைதளம் http:/sivaganga.nic.in வேலைவாய்ப்புப் பிரிவில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
2. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் மற்றும் தகுந்த ஆவண நகல்களுடன் மேலே குறிப்பிட்டுள்ள மாவட்ட நலவாழ்வுச் சங்க அலுவலக முகவரிக்கு 26.12.2024 மாலை 5.00 மணிக்குள் பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்பட வேண்டும்.
3. இந்த பதவி முற்றிலும் தற்காலிகமானது. எந்தவொரு காலத்திலும் பணிநிரந்தரம் செய்யப்படமாட்டாது.
4. காலிப்பணியிடங்கள் எண்ணிக்கை மாறுதலுக்கு உட்பட்டது.

தலைவர்,
மாவட்ட நலவாழ்வுச் சங்கம்/
மாவட்ட ஆட்சியர்,
சிவகங்கை.